1999 Dec 31 இரவு 9 மணி
2000 எப்படியெல்லாம் கனவு கண்ட வருடம் அது ரவிக்கு.
"பக்கார்டி ரம் அடிக்கப் போலாமா? " ரவியின் உல்லாசக் கூச்சல் நண்பர்களுக்கும் பற்றி கொண்டது. ரவி ஒரு உல்லாசப் பேர்வழி. அவனுக்கு வாழ்க்கையில் சோகம் என்றால் என்ன என்றே தெரியாது. எங்கும், எதிலும் இன்பம் என்றே வளர்ந்தவன். ஆகவே அவனது உற்சா கம் எப்போதும் அவனது நண்பர்களையும் தொற்றிக் கொண்டு விடும்.

மூவரும் மதுக்கடைக்குள் நுழைந்தார்கள்.

ரம் நன்றாகத்தான் இருந்தது. 2000ஆம் ஆண்டு பிறக்கிறது அல்லவா?
மில்லன்னியம், Y2K, டூம்ஸ் டே (பேரழிவு நாள்) என்று உலகமே பயந்து வரவேற்ற நாள் அல்லவா அது?.

நகரெங்கும் ஒரே கூட்டம். நன்றாகக் குடித்து விட்டு வெளியே வந்தவர்களுக்கு பசி வயிற்றைக் கிள்ளியது. சாப்பிடும் போதுதான் ஆம்ஸ் கூவினான்: "டேய், தண்ணி அடிச்சதுக்கு துட்டு குடுக்க மறந்துட்டேன்டா, ஒரே போதையில் 3 பேரும் வெளிய வந்துட்டமா?, எனக்கும் மறந்தே போச்சு, ஒரே கூட்டம் வேற". அன்று ஆம்ஸின் பிறந்த நாள். Dec 31 என்ன அருமையான பிறந்த நாள் அது?.
ஆம்சுக்காக அனைவரும் சர்ச் போனார்கள்.

சர்ச் மின் விளக்குகளாலும், வானம் கண் சிமிட்டும் நட்சத்திரங்களாலும் அந்தப் புனித நா ளில் அலங்கரிக்கப் பட்டு இருந்தது. சர்ச் போவது ஆம்ஸ்க்காக என்றலும், ரவிக்கு சர்ச் ஒன்றும் புதிதல்ல. சிறு வயதிலிருந்தே கிறித்துவப் பள்ளிகளில் படித்து வந்ததாலும், பைபிளை பலமுறை படித்து அறிந்தவன் என்பதாலும், எக்கடவுளையும் சமமாகப் பாவித்து வணங்கும் இயல்பான இந்துக் குணமுடையவன் ரவி. ஆயினும், குடித்து விட்டு சர்ச் போ வது மூவருக்கும் மனதைக் குடைந்தது. "இயேசுவே!, எங்களை மன்னித்துக் கொள்ளும்; உம்முடைய புனித தேவாலயத்திற்கு இப்படி நாங்கள் வந்ததற்காக" என்று உள்ளூர பாவ மன்னிப்பு கேட்டுக் கொண்டார்கள் மூவரும். "நல்ல வாழ்க்கையை, நல்ல ஆண் மகவைக் கொடுத்தாய், இறைவா! நன்றி என்று துதித்தான் ரவி. அவனுக்கு
திருமணமாகி சரியாக 10 மாதத்தில் ஒரு ஆண் குழந்தைக்குத் தகப்பனானான் ரவி. பரி ட்சை காரணமாக ஊருக்குச் செல்லாததால் 3 மாதக் குழந்தையை இன்னும் அவன் காணவி ல்லை.

சர்ச்சில் இமாசலப் பிரதேச சிறுமிகளின் கரோல் பாடல்கள். ரவிக்கு போதையிலும் கவனம் தப்பியது இல்லை; பாதிரி, ஆர்ச் பிஷப், கன்னியாஸ்த்ரிகள் என்று ஒவ்வொருவர் நடவடிக்கையையும் கவனித்தான்.பலமுறை அவன் தனது கடந்த வா ழ்க்கையில் செய்த தவறுகளுக்காக பாவமன்னிப்புக் கேட்க நினைத்ததுண்டு. மானசீகமாக அவன் பலமுறை மனத்தால் இதோ இங்கு தெரியும் பாவ மன்னிப்புக் கூண்டிற்கு வந்ததுண்டு. ஆனால் அவை யாவும் இன்னும் மானசீகமாகவே இருந்து வருகிறது.

PDF created with FinePrint pdfFactory Pro trial version http://www.fineprint.com

போதையால் ரவிக்கு ரொம்ப நேரம் நிற்க முடியவில்லை, வெளியே வந்து சர்ச்சின் அகன்ற நடைப் படிகளில் அமர்ந்து கொண்டான் ரவி. "புத்தாண்டு எனக்கு எப்படி இருக்கும்?" என்ற எண்ணத்தில் ஆழ்ந்தான் அவன்.

சற்று நேரத்தில் நண்பர்கள் கலைந்தார்கள். வீட்டிற்கு வந்த ரவி டி.வியைத் தட்டினான். உலகெங்கும் உல்லாசம்!, களி!. எல்லோரும் மில்லன்னிய வருடத்தை மிக்க இன்பத்தோடு வரவேற்று இன்புற்றது, போப் ஜான் பாலின் வாடிகன் மாஸ், நம் ஊர் கோவில்களின் சிறப்பு பூசைகள், y2k பிரச்சனையால் உலகம் அதிக பாதிப்பு இல்லை என்பதையும் பல சேனல்கள் மாற்றி பார்த்துவிட்டு ரிமோட்டோடு தூங்கிப் போனான் ரவி.

Jan 01, 2000

"ஹலோ, அம்மா, அக்கா, ஹாப்பி நியு இயர்!". ரவி இருப்பதோ டெல்லியில். உறவினரும், மனைவியும் இருப்பது தமிழ்நாட்டில். மனைவிக்குத் தான் முதலில் புத்தாண்டு வாழ்த்துச் சொல்ல போன் செய்தான். அங்கு போன் எடுக்க ஆளில்லை. எனவே அம்மா, அக்காவிற்கு போன் செய்தான் ரவி.

"same to you ரவி, ஆனால் உன் குழந்தைக்கு ரொம்ப முடியாமல் போய்ட்டுப்பா" என்றாள் அக்கா சோகமாக.

"ஏன் என்ன ஆச்சு?"

"ஏதோ ஜெனடிக் டிசீசாம்ப்பா. என்ன வைத்தியம் பண்ணாலும் கேட்காதாம். குழந்தை கை, கால் அசைப்பதில் சிரமமா இருக்காம். அம்மாவும் உன் மனைவியின் ஊரில் தான் இருக்கிறாள், அவர்கள் அலோபதி, ஹோமியோபதி, ஆயுர்வேதம் என்று எல்லா மருத்துவமும் பார்த்து வருகிறார்கள், நீ உடனே கிளம்பி வாப்பா, என்ன செலவானாலும் பரவாயில்லை, நாங்கள் எப்படியாவது நீ வரும் முன் குழந்தையை காப்பாற்றப் பார்க்கிறோம்"

வேறு அதிகம் பேச மனமின்றி போனை வைத்தான் ரவி. என்ன இது... புத்தாண்டு சரியில்லையே? கர்த்தர் சபித்து விட்டாரோ? குடித்து விட்டு சர்ச் போனதற்க்காக?.

அன்றிரவு டெல்லியின் இரவு ரோடுகளில் தூக்கமின்றி சுற்றி சுற்றி நடந்தான் ரவி. உறங்கா இரவு அது ரவிக்கு.

லீவ் உடனே கிடைத்தது. இரவு 1.30 ரயில். கர்த்தரே அனுப்பி வைத்தது போல உடன் ஒரு இளம் கேரள பாதிரியும், நர்சும் சக பயணிகள். பாதிரி அந்த இருட்டிலும் இவனது வேதனை ததும்பிய முகத்தைப் பார்த்து, "என்னப்பா? ஒரு மாதிரியா இருக்கே? என்ன பிரச்சனை?" என்று வாஞ்சையோடு அணுகினார்.

"அய்யா என் 3 மாதக் குழந்தைக்கு ஏதோ தீராத நோயாம். பிழைப்பது சிரமம் என்று சொல்லி விட்டார்கள். பரிட்சை, பரிட்சை என்று இதுவரை நான் குழந்தையை பார்க்கக் கூட இல்லை, முதல் முதலில் இந்த நிலைமையில்தான் பார்க்கணும்னு இருக்கு என்ன செய்ய?"

PDF created with FinePrint pdfFactory Pro trial version http://www.fineprint.com

என்றான்.

"தம்பி, கர்த்தரால் முடியாதது ஒன்றும் இல்லை. ஜெபத்தால் இயலாதது ஒன்றும் இல்லை. இதோ நாம் ஜெபிப்போம், பிரயாணம் முழுவதும் ஜெபித்துக் கொண்டே போவோம். உன் பிரச்சனை எல்லாம் தீர்ந்து விடும். அதன் பின் நீ சந்தோஷத்தோடே கர்த்தருடைய ஆலயத்திற்கு வந்து நன்றி சொல்" என்று கருணையோடு பாதிரி கூறினார்.

ரவி இந்துதான். எனினும் சிறு வயது முதல் கிறித்துவப் பள்ளிகளில் வளர்ந்தவன், கிறித்துவ நண்பர்களோடு ஆன்மிக சர்ச்சையில் ஈடுபட்டவன். எனவே ஜெபம் அவனுக்கு புதிது அல்ல.

ஓடும் ரயிலில், நட்ட நடு நிசியில், அவனும் பாதிரியும் முழங்காலிட்டு ஜெபித்தனர்.

ஜெனடிக் வியாதி என்பதால் ஜெபத்தையும் மீறி ரவியின் மனதுள் முழு நம்பிக்கை இல்லை. மனச் சாந்தியாவது ஜெபத்தால் கிட்டுமே என்று ஜெபித்தான்.

ரயில் இருளைக் கிழித்துக் கொண்டு ஓடியது.

விஜயவாடா. ஒரு ஷீ துடைக்கும் சிறுவன் ரயிலில் ஏறினான். ஒரு கால் வேறு ஊனம். நகர்ந்து நகர்ந்து வந்தான் அந்த சிறுவன்.

பாதிரியின் ஷீவைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, துடைத்துத் தருகிறேன், 5ரூ கொடு என்றான். பாதிரிக்கு வெறுப்பு. "அதெல்லாம் வேண்டாம் போ, ஷீ நன்றாகத் -தான் உள்ளது என்றார் பாதிரி. பையன் அடம் பிடித்ததால் பாதிரிக்கு கோபம் வந்து விட்டது.

"போடா, டேய் போடான்ன..வந்துட்டானுங்க ரயில்ல உசிர வாங்கறதுகுன்னே.. ஷீ தான் நல்லா இருக்குன்னு சொன்னேன்லா?" காலை உதறி சீறி விழுந்தார் பாதிரி.

நேற்று இரவு பார்த்த பாதிரி வேறு, இவர் வேறு. நேற்று இரவு யாரோ கண் முன் தெரியாதவனுக்காக ஜெபித்த அன்பின் ஒளி அவர். இன்று 5 ரூபாய் காசுக்காக ஊனமுற்ற தொழிலாளியை நோக்கி காலை உதறும் வெறுப்பின் வண்ணம் இவர்.

ரவியால் தாங்கமுடியவில்லை. "தம்பி, என் ஷீவுக்கு பாலிஷ் போடு" என்ரான். ரவியின் வெள்ளை கான்வாஸ் ஷீவை துடைத்துக் கொடுத்தான் அந்த ஊனமுற்ற பையன். ரவி அந்தச் சிறுவனை தனியே அழைத்து, வாசல் அருகில் வைத்து அவனுக்கு 50ரூ கொடுத்தான். இதுவரை இவ்வளவு பெரிய கொடையாளியாக ரவி இருந்தது இல்லை தான், எனினும் தனது குழந்தையின் நிலை, அவனது கை, கால் தூக்க இயலாத நிலை இவை எல்லாம் சேர்ந்து இந்த ஊனமுற்ற ஷீ துடைக்கும் தொழிலாளிக்கு உதவும்படி செய்தது.

PDF created with FinePrint pdfFactory Pro trial version http://www.fineprint.com

அந்தப் பையனுக்கோ ரொம்ப சந்தோஷம். நன்றி சொல்லிவிட்டு சென்று விட்டான்.

பாதிரி இப்போது பழைய நிலைமைக்கு வந்துவிட்டார். இன்னும் பல நண்பர்களைக்கூட்டிக் கொண்டு அல்லேலூயா, ஸ்தோத்திரம் என்று திரு உள்ளப் பாடல்கள் பாடினார். ரவியும் அவருடன் சேர்ந்து இயேசுவின் நாமத்தைப் பாடினாலும், அவன் உள்ளம் எல்லாம் ஊரை நோக்கி இருந்தது. "motor neuron disease" என்றாள் அக்கா. அது உலகப் புகழ் பெற்ற வான இயலாளர் ஸ்டீபன் ஹாக்கின்ஸ்க்கு வந்தது போன்றது. இந்த மாதிரி உள்ளவருக்கு புத்திக் கூர்மை ரொம்ப உண்டு. "கடவுளே, ஒரு ஊனமுற்ற பையனைக் கொடுத்தாலும், அவனை பெரிய சாதனையாளனாக ஆக்கும் படிக்கு எனக்கு வலிமை தா, எத்தனை ஊனமுற்றோர் எவ்வளவு வியக்கும்படி சாதனை செய்து உள்ளனர்?.... இப்படியெல்லாம் ரவியின் எண்ணம் அலைபாய்ந்தது.

ரயில் பெரிய ஸ்டேசனில் நிற்கும் போதெல்லாம் போன் போட்டு விசாரித்தான். இப்போது கடையத்து ஹோமியோபதி வைத்தியரிடத்தில் எல்லோரும் போயிருப்பதாகவும், கடைசி முயற்சியாக இந்த மருத்துவரைப் பார்ப்பதாகவும் செய்தி.

ரயில் ஊர் அடைந்ததும் உடனே ஆட்டோ பிடித்து அக்கா வீடு அடைந்தான் ரவி. "ரவி அப்படியே ஆட்டோவத் திருப்புப்பா" எனச் சொல்லிவிட்டு தாரை தாரையாகக் கண்ணீர் வடித்தாள் அவன் அக்கா. ரவிக்கு எல்லாம் புரிந்தது. "முடிந்தது,... எல்லாம் முடிந்தது".. ரவியின் எண்ணம் இப்போது ஒரு சமநிலைக்கு வந்தது. போனில் கேட்டபோது அது ஒரு பிரச்சனை, ரயிலில் வரும் போது அது ஒரு வேதனை. இப்போதோ மனதில் மயான அமைதி நிலவியது. ஆம் சில பிரச்சனைகளுக்கு மரணம் தான் எளிய தீர்ப்பாகி விடுகின்றது. பிறந்தது முதல் கடைசிக் காலம் வரை ஊனமுற்றவனாகக் கழிப்பதை விட அவன் போய் சேருவதே மேல் என்று அனைவரும் கருதினார்கள்.

werdnig hoffman disease அல்லது floppy baby disease என்ற வியாதிக்காரர்களுக்கு மூச்சு திணறித்தான் இறப்பு வருமாம். அப்படித்தான் ரவியின் 3 மாதக் குழந்தையும் இறந்தான். இறக்குமுன் நல்ல சிரிப்பு சிரித்தானாம். உடலெல்லாம் வேர்த்து ஊற்றியதாம்.

ஒரு துளி கூட ரவிக்கு கண்ணீர் வரவில்லை, ஏன்?. கல் மனதாகி விட்டானா?. இல்லை. பிரச்சனைக்கு தீர்வு கடவுளே கொடுத்து விட்டார். இன்னும் என்ன?. பிறந்த எல்லோரும் என்றாவது ஒரு நாள் போய்த்தான் சேரவேண்டும். வாழ்நாள் முழுக்க அவன் போராடி வாழ்வதை விட, சில கணங்கள் குதூகலமாக இருந்து விட்டு சிவனடி சேருவதே மேல்.

குழந்தை 3மாத, ஆரோக்கியமான, சீராட்டப்பட்ட குழந்தை, ஐஸ் அடுக்கப்பட்டு மரத்தூள் உப்பு தூவப்பட்ட படுக்கையின் மேல் தூங்குவது போல் படுத்து இருந்தது. பார்த்தால் யாரும் அதற்கு வியாதி வந்தது என்றே சொல்ல முடியாதபடிக்கு அது

PDF created with FinePrint pdfFactory Pro trial version http://www.fineprint.com

நிம்மதியாக உறங்கியது. கடைசிப் பிரயாணம் அதற்கு அந்த கிராமத்தின் ஆற்றோரம் உள்ள சுடிகாட்டிற்கு. வழி நெடுக, கை வலித்தாலும், மரத்தாலும் பொறுத்துக் கொண்டு நாலு கிலோமீட்டர்கள் அந்த கும்மிருட்டில் பெட்ரோமாக்ஸ் வெளிச்சத்தில் சாதி சனம் புடைசூழ குழந்தையை தூக்கிக் கொண்டு ரவி நடந்தான்.

தலைப் பிள்ளையை நின்று எரித்து வரச் சொன்னார்கள். சில மந்திர தந்திரங்களுக்கு தலைப் பிள்ளையின் மண்டையோடு மிக உதவியாக இருக்குமாம். வெட்டியானுக்கு இதற்காகவே தனியாக மேற்கொண்டு பணம் தர வேண்டியிருந்தது.

அரை மணி நேரத்தில் இறுதிசடங்கு முடிந்தது. எல்லாம் சேர்ந்து ஒரு சொம்பு சாம்பல்தான். அந்த தாமிரபரணி ஆறுதான் எத்தனை வம்சாவளிகளின் சாம்பலை கரைத்துக் கொண்டு ஓடுகிறது?. இந்தச் சிறு குழந்தையின் சொம்புச் சாம்பலா அதற்கு புதிய வேதனையை தந்து விடப் போகிறது?. இடுகாட்டோரம் உள்ள தாமிரபரணிக் கரையில் சொம்பைக் கவிழ்த்து விட்டு தானும் முங்கி எழுந்தான் ரவி. இப்போது அவனுக்கு கடவுளையும், இயற்கையையும் தவிர வேறு துணையில்லை.

PDF created with FinePrint pdfFactory Pro trial version http://www.fineprint.com